தினகனி

செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com



RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 96 | 4 Pages | 4.11.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 96 | 4 பக்கங்கள் | 4.11.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு**
**நிலத்தறைந்தான் கைபிழையா தற்று**

**விளக்கம்:**

(தன் வல்லமை புலப்படுத்தச்) சினத்தை பொருளென்று கொண்டவன் அழிதல், நிலத்தை அறைந்தவனுடைய கை தப்பாதது போல் ஆகும்.

## வடகொரியாவுக்கு அடுத்து நீங்கதான் ஆபத்து.. இந்தியாவை 'சைபர்' எதிரியாக அறிவித்த கனடா



கனடா, நவ.4


கனடாவைச் சேர்ந்த சீக்கிய பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஆண்டு பிரிட்டிஷ் கொலம்பியாவில் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் இந்திய அரசுக்கு தொடர்பு உள்ளதாக கனடா குற்றம் சாட்டி வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே மோதல் வெடித்தது. இருநாட்டு தலைவர்களும் தூதர்களை வெளியேற்றினர்.

இதற்கிடையே, கனடாவில் சீக்கிய பிரிவினைவாதிகளைக் குறிவைத்து வன்முறை, மிரட்டல் மற்றும் உளவுத்தகவல்கள் சேகரிப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உத்தரவிட்டதாகக் கனடா வெளியுறவுத்துறை துணை அமைச்சர் டேவிட் மாரிசன் குற்றம்சாட்டினார். இதை கண்டித்து மாரிசனுக்கு எதிராக இந்தியா சம்மன் அனுப்பியது.

மேலும் இந்திய அதிகாரிகளைக் கனடா அரசு உளவு பார்த்தாக மத்திய அரசு நேற்றைய தினம் புதிய குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள்ளது. ஆடியோ மற்றும் வீடியோ மூலம் கனேடிய அரசால் இந்திய தூதரக அதிகாரிகள் உளவு பார்க்கப்பட்டதாக இந்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார். இந்த குற்றச்சாட்டுக்கு பதிலளித்த கனடா, தங்களின் பாதுகாப்பாகவே அவர்கள் கண்காணிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

மேலும் இந்தியாவை சைபர் எதிரியாகவும் கனடா அறிவித்துள்ளது. தற்போது வெளியிடப்பட்டுள்ள கனடா தேசிய சைபர் அச்சுறுத்தல் மதிப்பீடு 20252026 அறிக்கையில், தங்கள் நாட்டின் இணைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எதிரி நாடுகளின் பட்டியலில், சீனா, ரஷ்யா, ஈரான், வடகொரியா ஆகிய நாடுகளுக்குப் பிறகு ஐந்தாவது நாடாக இந்தியாவின் பெயரை சேர்த்துள்ளது. இந்த அறிக்கையானது கனேடிய இணைய பாதுகாப்பிற்கான தேசிய தொழில்நுட்ப மையம் வெளியிட்டுள்ளது.

## அமெரிக்க அதிபர் தேர்தல்: புதிய கருத்துக் கணிப்பில் கமலா ஹாரிஸ் முன்னிலை



வாஷிங்டன், நவ.4

வல்லரசு நாடான அமெரிக்காவில் நாளை மறுநாள் அதிபர் தேர்தல் நடக்கிறது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய துணை அதிபரும், இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான கமலா ஹாரிஸ், குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் போட்டியிடுகிறார்கள்.

தேர்தலுக்கு இன்னும் 2 நாட்கள் உள்ள நிலையில் இருவரும் இறுதிக் கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். கமலா ஹாரிஸ், ஜார்ஜியாவில் பிரசாரத்தில் ஈடுபட்டார். வடக்கு கரோலினாவில் டிரம்ப் ஆதரவு திரட்டினார்.

இந்த நிலையில் அதிபர் தேர்தலில் இறுதிக்கட்ட கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. அயோவா மாகாணத்தில் நடந்த இந்த கருத்துக்கணிப்பில் கமலா ஹாரிஸ் முன்னிலையில் உள்ளார். அவருக்கு 47 சதவீத ஆதரவு கிடைத்தது. டிரம்புக்கு 44 சதவீத ஆதரவு கிடைத்தது. டிரம்பை விட கமலா ஹாரிஸ் 3 சதவீதம் அதிகம் பெற்றுள்ளார். 2016 மற்றும் 2020ம் ஆண்டுகளில் நடந்த தேர்தலில் அயோவா மாகாணத்தில் டிரம்ப் எளிதில் வெற்றி பெற்று இருந்தார். தற்போது அங்கு அவர் பின்தங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே வேளையில் மற்றொரு நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் டிரம்ப் முன்னிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இரு வேட்பாளர்கள் இடையே கடும் போட்டி நிலவும் என்று அரசியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## சைக்கிள் ஓட்டும்போது செல்போன் பயன்படுத்தினால் 6 மாதம் சிறை

டோக்கியோ, நவ.4

ஜப்பானில் உள்ள மக்கள் சைக்கிள் போக்குவரத்தையே பெரிதும் விரும்புகின்றனர். குறிப்பாக கொரோனா தொற்று காலத்தில் பொது போக்குவரத்து முடங்கியது.

இதனையடுத்து அங்கு சைக்கிள் ஓட்டுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தது. அதேசமயம் சைக்கிள் ஓட்டும்போது கவனக்குறைவால் ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கையும் பல மடங்கு உயர்ந்தது.

அதாவது கடந்த ஆண்டில் மட்டும் ஜப்பானில் சுமார் 72 ஆயிரம் சைக்கிள் விபத்துகள் பதிவாகி உள்ளன. இது நாடு முழுவதும் ஏற்படும் மற்ற வாகன விபத்துகளில் 20 சதவீதம் ஆகும்.

இதனால் சைக்கிள் விபத்துகளை கட்டுப்படுத்த அரசாங்கம் முடிவு செய்தது. அப்போது சைக்கிள் ஓட்டும்போது செல்போன் பயன்படுத்துவதே விபத்துக்கு முக்கிய காரணம் என கண்டறியப்பட்டது. எனவே போக்குவரத்து விதிகளில் அங்கு புதிய திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன.

அதன்படி சைக்கிள் ஓட்டும்போது செல்போன் பேசவோ, இணையத்தை பயன்படுத்தவோ கூடாது. இதனை மீறுபவர்களுக்கு 6 மாதம் சிறை தண்டனை அல்லது சுமார் ரூ.50 ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படும்.

இதுதவிர மதுபோதையில் சைக்கிள் ஓட்டினாலும்3 ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது சுமார் ரூ.2¾ லட்சம் அபராதம் விதிக்கும் வகையில் போக்குவரத்து விதிமுறைகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டு உள்ளது.

# கேரளா ரயில் விபத்து.. உயிரிழந்த 4 தொழிலாளர்களின் குடும்பத்துக்கு நிதியுதவியை அறிவித்த முதல்வர் ஸ்டாலின்

சென்னை, நவ.4

கேரள மாநிலம், பாலக்காடு, ஷோரனூர் அருகில் கேரளா எக்ஸ்பிரஸ் ரயில் மோதிய விபத்தில் உயிரிழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த துப்புரவுத் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆறுதல் தெரிவித்துள்ளார். நிதியுதவியையும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

கேரள மாநிலம், பாலக்காடு அருகே உள்ள பாரதப்புழா ஆற்றின் மேல் அமைந்துள்ளது ஷோரனூர் ரயில்வே பாலம். இந்தப் பாலத்தில் தொழிலாளர்கள் பலர் தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்துள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த ஊழியர்களும் பணியில் ஈடுபட்டிருந்துள்ளனர். இந்நிலையில், ரயில்வே பாலத்தின் மீது தொழிலாளர்கள் சிலர் நடந்து சென்றுள்ளனர்.

அந்த சமயத்தில், டெல்லி திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ரயில் மதியம் 3.05 மணியளவில் திடீரென வேகமாக வந்துள்ளது. அப்போது, ரயில் பாதையில் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மீது ரயில் மோதியதில் பயங்கர விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 4 தொழிலாளர்கள் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

ரயில் மோதியதில் சேலத்தைச் சேர்ந்த லட்சுமணன், ராணி, வள்ளி மற்றும் மற்றொரு லட்சுமணன் என 4 பேர் உயிரிழந்துள்ளதும், உயிரிழந்தவர்களில் இரண்டு பேர் பெண் ஊழியர்கள் என்பது தெரியவந்துள்ளது. விபத்தில் உயிரிழந்த மூன்று பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. ஒருவரது உடல் மட்டும் கிடைக்கவில்லை.





இந்நிலையில், பாரதப்புழா ஆற்றில் நான்காவது நபரின் உடலைத் தேடும் பணி நேற்று நடைபெற்றது. ஆனால், ஆற்றில் தற்போது நீரின் வேகம் அதிகமாக இருந்தாதல் உடலைத் தேடும் பணி கைவிடப்பட்டது.

இதைத்தொடர்ந்து, சிறப்பு நீச்சல் பயிற்சி பெற்ற வீரர்கல் இன்று தேடும் பணிகளில் ஈடுபட்டனர். இந்த சம்பவம் நடந்தபோது, பத்து தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. ரயில் வருவதை அறிந்த 6 பேர் தண்டவாளத்தில் இருந்து வெளியே ஓடியதால் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளனர்.

இந்தசம்பவம் தொடர்பாககாவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவத்தால் சேலம் மாவட்டம், அடிமலைப்புதூர்கிராம மக்கள் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அரசு சார்பில் உரிய நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

மேலும், ரயில் பாதை பராமரிப்பு பணியில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பு குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் குற்றச்சாட்டுகள் கூறப்படுகிறது. அண்மைக்காலமாக ரயில் விபத்து சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், இந்த விபத்துகளைத் தடுக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், கேரளா மாநிலம், பாலக்காடு, ஷோரனூர் அருகில் கேரளா எக்ஸ்பிரஸ் ரயில் மோதிய விபத்தில் உயிரிழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த துப்புரவுப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது: கேரளா மாநிலம், பாலக்காடு, ஷோரனூர், பாரதப்புழா பாலம் அருகில் நேற்று பிற்பகல் கேரளா எக்ஸ்பிரஸ் ரயில் எதிர்பாராதவிதமாக ரயில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த ரயில் விபத்தில் ரயில் பாதையை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், ஆச்சாங்குட்டப்பட்டி, அடிமலை புதூர் கிராமத்தைச் சேர்ந்த அண்ணாமலை மகன் லட்சுமணன் (55), லட்சுமணன் மனைவி வள்ளி (45), காரைக்காடு, டி.பெருமாள் பாளையத்தைச் சேர்ந்த ராமசாமி மகன் லட்சுமணன் (45), மற்றும் அல்லிக்குட்டையைச் சேர்ந்த வீரன் மகள் ராஜம்மாள் (43) ஆகிய நால்வரும் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

## திருக்கோவிலூரில் தீ விபத்தால் வீட்டை இழந்த குடும்பத்தாருக்கு ரோட்டரி சங்கம் சார்பில் நிவாரணம்



கள்ளக்குறிச்சி, நவ.4

கள்ளக்குறிச்சி மாவட்டம் , திருக்கோவிலூர் நகராட்சிக்கு உட்பட்ட தாசார்புரம் பகுதியில் வசிப்பவர்கள் ராஜா,பார்வதி தம்பதியினர். முதியவர்கள் ஆன இவர்கள் கூரை வீட்டில் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்பு ராஜா டீ போடுவதற்காக சிலிண்டரை ஆன் செய்து பற்ற வைத்துள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக சிலிண்டரின் நுழைவு வாயில் எரிவாயு கசிவை ஏற்பட்டு தீப்பற்றி அவர்களது வீடு சேதம் அடைந்தது.

இதனைத் தொடர்ந்து திருக்கோவிலூர் ரோட்டரி சங்கம் சார்பில் ரோட்டரி சங்கத் தலைவர் செந்தில்குமார் தலைமையில் வீட்டை இழந்த குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி ரூபாய்.1,000 பணம் மற்றும் அரிசி, மளிகை, பொருட்கள், துணி பாய் உள்ளிட்ட 5,000 ரூபாய் மதிப்பிலான நிவாரண பொருட்களை வழங்கினர். இந்த நிகழ்வில் முன்னாள் ரோட்டரி சங்கத் தலைவர் வாசன் , செயலாளர் கோத்தம்சந்த், பொருளாளர் சௌந்தரராஜன், ரோட்டரி சங்க உறுப்பினர் முத்துக்குமாரசாமி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## தனியார் பல்கலை விடுதியின் 6வது மாடியில் இருந்து குதித்து கல்லூரி மாணவர் தற்கொலை

கூடுவாஞ்சேரி, நவ.4

வண்டலூர் உயிரியல் பூங்கா எதிரே ஒரு தனியார் பல்கலைக்கழக மாணவர் விடுதியில், கடந்த 3 ஆண்டுகளாக குடும்பத்தினரை பிரிந்திருக்கும் மன உளைச்சலில் நேற்றிரவு ஒரு கல்லூரி மாணவர் 6வது மாடியிலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டார். அவர் எழுதிய உருக்கமான கடிதத்தை போலீசார் கைப்பற்றினர். இப்புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்ற னர். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது. திருச்சி மாவட்டம், கே.கே. நகர் 3வது தெரு, மகாலட்சுமி நகர் பகுதியை சேர்ந்தவர் முகமது உமர் (20). இவர், சென்னை வண்டலூர் உயிரியல் பூங்கா எதிரே ஒரு தனியார் பல்கலைக்கழக விடுதியின் 5வது மாடியில் தங்கி, அங்குள்ள பொறியியல் கல்லூரியில் 3ம் ஆண்டு பி. டெக். சிஎஸ்சி படித்து வந்துள்ளார். இவரது பெற்றோர் மற்றும் உடன்பிறந்தவர்கள் துபாயில் தங்கியுள்ளனர். இதனால் முகமது உமர் குடும்பத்தை விட்டு பிரிந்து, கடந்த 3 ஆண்டுகளாக கல்லூரி விடுதியில் தங்கியிருந்து படிப்பதில் கடும் மன உளைச்சலில் இருந்து வந்துள்ளார்.

இந்நிலையில், நேற்று தனது குடும்பத்தினரை பிரிந்திருந்த கல்லூரி மாணவர் முகமது உமருக்கு மனஉளைச்சல் அதிகரித்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து, நேற்றிரவு அந்த தனியார் பல்கலை விடுதியின் 6வது மாடிக்கு முகமது உமர் சென்றுள்ளார். பின்னர் அங்கிருந்து கீழே குதித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இதில் அவர் படுகாயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடினார். இதை பார்த்ததும் அங்கு தங்கியிருந்த சக மாணவமாணவிகள் அலறி கூச்சலிட்டனர். இதுகுறித்து தகவலறிந்ததும் கிளாம்பாக்கம் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். எனினும், 6வது மாடியிலிருந்து கீழே விழுந்த கல்லூரி மாணவர் முகமது உமர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியானார்.

அவரது சடலத்தை போலீசார் கைப்பற்றி, குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இப்புகாரின்பேரில் கிளாம்பாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து, தற்கொலைக்கு முன் கல்லூரி மாணவர் முகமது உமர் எழுதிய உருக்கமான கடிதத்தையும் கைப்பற்றி விசாரித்தனர். முதல் கட்ட விசாரணையில், துபாயில் இருக்கும் தனது பெற்றோர், உடன்பிறந்தவர்கள் மற்றும் நண்பர்கள் கடந்த 3 ஆண்டுகளாக சரிவர பேசாததால் கடும் மனஉளைச்சலில் இருந்த கல்லூரி மாணவர் முகமது உமர், அனைவருக்கும் குறுஞ்செய்தி அனுப்பியதுடன், ஒரு உருக்கமான கடிதத்தை எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்திருப்பது தெரியவந்தது. இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.



நீலகிரி மாவட்டம் குன்னூர் எம்.ஆர்.சி ராணுவ முகாம் அருகே நேற்று மாலை ராட்சத மரம் நான்கு சக்கரவாகனத்தின்மீதுவிழுந்ததில் ஜாகிர்ஹுசைன்(43)வாகனத்தில் இருந்தபடியே உயிரிழந்தார் சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புத் துறையினர் மற்றும் பொதுமக்கள் மீட்பு பணியில் ஈடுபட்டு உயிரிழந்தவரின் உடலை மீட்டு குன்னூர் அரசு லாலி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர் இந்த நிகழ்வு அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது மேலும் இறந்த ஜாகிர் ஹுசைன் இவருக்கு கைருன்னிசா (40) மற்றும் ஒரு மகன் (12) இருப்பது குறிப்பிடத்தக்கது.

## தொடர் விடுமுறை எதிரொலி: ஊட்டியில் குவிந்த சுற்றுலா பயணிகள்

நீலகிரி, நவ.4

தீபாவளி பண்டிகை நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. தீபாவளியை தொடர்ந்து அரசு விடுமுறை, வார இறுதி நாட்கள் உள்பட 4 நாட்கள் தொடர் விடுமுறை என்பதால், பொதுமக்கள் விடுமுறையை கொண்டாட குடும்பத்தோடு சுற்றுலா தளங்களுக்கு படையெடுத்து வருகின்றனர்.



அந்த வகையில், நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நிலவும் இதமான காலநிலையை அனுபவிக்கவும், இயற்கை காட்சிகளை கண்டு ரசிக்கவும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மட்டுமின்றி, வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர்.

அவ்வாறு வரும் சுற்றுலா பயணிகள், அங்குள்ள அரசு தாவரவியல் பூங்கா, பைக்காரா, குன்னூர் சிம்ஸ் பூங்கா, தொட்டபெட்டா உள்ளிட்ட இடங்களை கண்டுகளித்தனர்.


குறிப்பாக படகு இல்லத்திற்கு சென்ற சுற்றுலா பயணிகள், மிதிபடகு, துடுப்பு படகு, மோட்டார் படகு உள்ளிட்டவற்றில் பயணம் செய்து இயற்கை காட்சிகளை கண்டு ரசித்தனர்.

சுற்றுலா பயணிகளின் வருகைஅதிகரித்துகாணப்பட்டதால், ஊட்டி சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. மேலும் நாளை ஞாயிறு விடுமுறை என்பதால், ஊட்டிக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## முயல் வேட்டைக்கு சென்ற இருவர் சடலமாக மீட்பு போலீஸ் விசாரணை

புதுக்கோட்டை, நவ.4

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகே முயல் வேட்டைக்கு சென்ற இருவரை சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். அரியாணிப்பட்டிகிராமத்தை சேர்ந்த ராஜேஷ் கண்ணன், முருகானந்தம் ஆகியோர் சடலமாக மீட்கப்பட்டுள்ளன. முயல் வேட்டைக்கு சென்றதாக கூறப்படும் நிலையில்,




வீடு திரும்பாததால் இருவரையும் உறவினர்கள் தேடி வந்தனர். வனப்பகுதிக்கு சென்று தேடிய நிலையில் இருவரும் மர்மமான முறையில் இறந்து கிடந்துள்ளனர். இருவரும் முயல் வேட்டைக்கு சென்றபோது, மின்வேலியில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என போலீசார் நடத்தியமுதற்கட்டவிசாரணையில் தெரியவந்துள்ளது.

## திருவாரூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிப்பு

திருவாரூர், நவ.4

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அருகே ஜாம்பவானோடையில் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சேக்தாவூது ஆண்டவரின் தர்கா உள்ளது.

ஆண்டுதோறும் இந்த தர்காவில் கந்தூரி விழா நடைபெறுவது வழக்கம்.

14 நாள்கள் நடைபெறும் இந்த விழாவில் இந்தியா முழுவதும் இஸ்லாமியர்கள் மட்டுமல்லாது



இந்துக்கள் உள்ளிட்ட மாற்று மதத்தினரும் பங்கேற்பார்கள்.

இதையொட்டி திருவாரூர் மாவட்டத்திற்கு வரும் 13ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான அறிவிப்பை மாவட்ட ஆட்சியர் பிறப்பித்துள்ளார்.

இந்த விடுமுறையை ஈடுசெய்யும் வகையில் டிச.7ஆம் தேதி அரசு வேலை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## போக்சோமோசடி வழக்கில் சிறப்பாக புலனாய்வு: 2 பெண் போலீஸ் சூப்பிரண்டுகளுக்கு மத்திய அரசின் திறன் பதக்கம்

சென்னை, நவ.4

நாடு முழுவதும் உள்ள பணியாற்றும் போலீஸ் அதிகாரிகளில் சிறப்பாக புலனாய்வு செய்தவர்களை தேர்வு செய்து மத்திய அரசு திறன் பதக்கம் அறிவித்து உள்ளது.

அனைத்து மாநிலங்களிலும் 463 போலீஸ் அதிகாரிகள் இதற்கு தேர்வு பெற்று உள்ள நிலையில் தமிழகத்தில் 2 பெண் போலீஸ் சூப்பிரண்டுகள் உள்பட 7 பேர் இந்த பதக்கத்துக்கு தேர்வாகி உள்ளனர்.

சிறப்பாக புலனாய்வு செய்ததற்காக போலீஸ் சூப்பிரண்டுகள் வந்திதா பாண்டே, மீனா, போலீஸ் உதவி கமிஷனர்கள் கார்த்திகேயன், நல்லசிவம், இன்ஸ்பெக்டர்கள் அம்பிகா, உதயகுமார், பாலகிருஷ்ணன், தடயவியல் பிரிவு துணை இயக்குனர் சுரேஷ் நந்த கோபால் ஆகி



யோருக்கு மத்திய உள்துறை அமைச்சகம் திறன் பதக்கத்தை அறிவித்துள்ளது. உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த வந்திதா பாண்டே தமிழக பிரிவை சேர்ந்த ஐ.பி.எஸ். அதிகாரி ஆவார். புதுக்கோட்டை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டாக உள்ள இவர் உதவி போலீஸ் சூப்பிரண்டாக பணியாற்றிய போது போக்சோவழக்கு ஒன்றில் சிறப்பாக துப்பு துலக்கி குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கி கொடுத்து உள்ளார். இதற்காக அவருக்கு திறன் பதக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னொரு போலீஸ் சூப்பிரண்டான மீனா தற்போது தமிழக போலீசில் ஊடகபிரிவில்பணியாற்றி வருகிறார். இவர் பொருளாதார குற்றப்பிரிவில் பணியாற்றிய போது மோசடி வழக்கு தொடர்பாக சிறப்பாக புலனாய்வு செய்து குற்றவாளிகளுக்கு தண்டனைவாங்கிகொடுத்துள்ளார். அதற்காக எஸ்.பி. மீனாவும் திறன் பதக்கத்துக்காக தேர்வாகி உள்ளார்.

இவர்களுடன் 2 உதவி கமிஷனர்கள், 3 இன்ஸ்பெக்டர்கள் திறன் பதக்கத்தை பெறுகிறார்கள். இதற்கு முன்பு இந்த பதக்கம் சிறந்த நடவடிக்கைக்கான பதக்கம், சிறந்த புலனாய்வுக்கான பதக்கம், அசாதாரண சேவை பதக்கம், சிறப்பு பணி பதக்கம் ஆகிய 4 பதக்கங்கள்வழங்கப்பட்டு வந்தன.

இந்த பதக்கங்களை ஒரே பதக்கமாக கடந்த பிப்ரவரி மாதம் மத்திய அரசு அறிவித்தது. இதன்படி வல்லபாய் படேலின் பிறந்த நாளான அக்டோபர் 31ந்தேதி மத்திய அரசு இதனை அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## உடன்குடி அருகே தலை தீபாவளிக்கு வந்த புதுப்பெண்ணை குத்தி கொன்ற வாலிபர் கைது

உடன்குடி, நவ.4

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி சாதரக்கோன்விளையை சேர்ந்தவர் சிவன். இவரது மகன் கோவிந்தன் (வயது 21). சம்பவத்தன்று இவர் அந்த பகுதியில் நின்று கொண்டிருந்த போது படுக்கபத்து பகுதியை சேர்ந்த வாலிபர் ஒருவர் அங்கு வந்துள்ளார்.

அவர் கோவிந்தனிடம் ஒரு முகவரி குறித்து கேட்டபோது அவர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த கோவிந்தன் முகவரி கேட்ட வாலிபரை சத்தம் போட்டு விரட்டினார். பின்னர் அந்த வாலிபர் 20க்கும் மேற்பட்டவர்களுடன் கோவிந்தன் வீட்டுக்கு சென்றார். அங்கு கோவிந்தன்வீட்டில் இல்லாததால் அவர்கள் திரும்பி உள்ளனர்.

இதுதொடர்பாக சமரசம் பேசுவதற்காக படுக்கபத்து பகுதியை சேர்ந்தவர்கள் சாதரக்கோன்விளையை சேர்ந்த மணிகண்டன் (40) என்பவரை அழைத்து சென்றனர். கோவிந்தன், அவரது தந்தை சிவன் ஆகியோரை வரவழைத்து மணிகண்டன் சமரசம் பேசினார். அப்போது ஏற்பட்ட தகராறில் மணிகண்டன் சிவனை தாக்கி உள்ளார். இதனால் ஆத்திரமடைந்த கோவிந்தன் அரிவாளால் மணிகண்டனை வெட்டினார். இதில் படுகாயமடைந்த மணிகண்டன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். பின்னர் கோவிந்தன், சிவன் ஆகியோர் குலசேகரன்பட்டினம் போலீசில் சரண் அடைந்தனர். அவர்களை போலீசார் கைது செய்தனர்.

இதற்கிடையே கோவிந்தனின் தங்கை முத்துலட்சுமிக்கும் (19), அழகப்பபுரத்தை சேர்ந்த வெயிலுமுத்துவுக்கும் கடந்த சில நாட்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. தலை தீபாவளி கொண்டாடுவதற்காக முத்துலட்சுமி தனது கணவருடன் பெற்றோர் வீட்டுக்கு வந்திருந்தார்.

இந்நிலையில் நேற்று மாலை அவர் வீட்டருகே சென்றபோது மணிகண்டனின் தம்பியான தாஸ் (24) என்ற வாலிபர் அங்கு வந்தார். அவர் முத்துலட்சுமியை ஓடஓட விரட்டி கத்தியால் சரமாரியாக குத்தி கொலை செய்து விட்டு தப்பி ஓடிவிட்டார்.

இதுகுறித்து தகவல் அறிந்த குலசேகரன்பட்டினம் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று முத்துலட்சுமி உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் தப்பி ஓடிய தாஸ் என்பவரை தனிப்படை அமைத்து தேடிவந்த நிலையில் நேற்று இரவு கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் நடத்திய விசாரணையில் அவர் போலீசில் கூறியதாவது: எனது அண்ணனை வெட்டிய கோவிந்தன் குடும்பத்தில் யாராவது ஒருவரை தீர்த்துக்கட்ட வேண்டும் என்று முடிவு செய்து எதிர்பார்த்து காத்திருந்தேன். நேற்று மாலை கோவிந்தன் வீட்டு அருகே கத்தியுடன் சென்றேன். அப்போது அங்கு ஆண்கள் யாரும் வீட்டில் இல்லை. இதனால் ஆத்திரத்தில் நின்று கொண்டிருந்த நான், அந்த வழியாக கோவிலுக்கு சென்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்த முத்துலட்சுமியை பார்த்தேன்.

அவரும் கோவிந்தன் குடும்பத்தில் ஒருவர் தானே என்று அவரை தீர்த்து கட்ட முடிவு செய்து, கத்தியுடன் அவரை நோக்கி ஓடினேன். அவர் என்னை பார்த்து பயந்து ஓடினார். ஆனாலும் விடாமல் துரத்தி சென்று கத்தியால் சரமாரி குத்தி கொலை செய்து விட்டு தப்பி ஓடி விட்டேன். இவ்வாறு அவர் கூறினார். இதனைத்தொடர்ந்து இந்த கொலை சம்பவத்தில் வேறு யாருக்கேனும் தொடர்பு உள்ளதா? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## மகேந்திரமங்கலம் அருகே கள்ளத்தொடர்பை கண்டித்ததால் கட்டிட தொழிலாளி வெட்டிக்கொலை

தருமபுரி, நவ.4

தருமபுரி மாவட்டம் மகேந்திரமங்கலம் அடுத்த பிக்கனஅள்ளி கிராமத்தில் நள்ளிரவில் கழுத்தில் வெட்டப்பட்ட நிலையில் ஆண் ஒருவர் கொலை செய்யப்பட்டு இருப்பதாக மகேந்திரமங்கலம் போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து கொலை செய்யப்பட்டு பிணமாக கிடந்த சடலத்தை மீட்டு தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தருமபுரி மாவட்டம், பென்னாகரம் அருகே உள்ள சமத்துவபுரம் கிராமத்தை சேர்ந்த அசோக்குமார் என்கின்ற வேலவன் (37) என்பதும், இவர் பெங்களூரில் சென்ட்ரிங் வேலை செய்து வந்துள்ளதும் தெரியவந்தது.

இவருக்கு திருமணம் ஆகி சுகன்யா என்ற மனைவி மற்றும் மூன்று குழந்தைகள் உள்ளனர்.

சுகன்யாவுக்கும், ஒரு வாலிபருக்கும் கள்ளத்தொடர்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனை வேலவன் பலமுறை கண்டித்துள்ளார். இது தொடர்பாக வழக்கும் நிலுவையில் உள்ளது. இதனால் தனது கணவரைதீர்த்து கட்ட சுகன்யா முடிவு செய்துள்ளார்.

அப்போது தீபாவளி பண்டிகை கொண்டாட தனது தாய் வீடான மகேந்திரமங்கலம் அடுத்த பிக்கனஅள்ளிக்கு வந்துள்ளார்.

அங்கு நேற்றிரவு நடைபெற்ற நடன நிகழ்ச்சி காண்பதற்காக வேலவன் தனது மனைவி குடும்பத்துடன் நடன நிகழ்ச்சி கண்டுக்களிக்க சென்றுள்ளார்.

அந்த சமயத்தில் மது போதையில் வேலவன் இருந்துள்ளார். அப்போது சுகன்யா தனது கள்ளக்காதலனை வரவழைத்து அங்கு ஒரு தோட்டத்தில் வேலவனை அரிவாளால் வெட்டி கொலை செய்ததாக விசாரணையில் தெரிய வந்ததாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக போலீசார் வழக்குபதிவு கொலையாளியை தேடி வருகின்றனர்.

## 44 ஆண்டுகளாக காங்கிரசில் அங்கம் வகித்து பா.ஜ.க.வில் இணைந்த ராஜபாளையம் பிரமுகர்

ராஜபாளையம், நவ.4

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தை சேர்ந்தவர் ரவிராஜா. மும்பையில் வசித்துவரும் பழுத்த அரசியல்வாதியான இவர் மும்பை மாநகராட்சியின் முன்னாள் எதிர்கட்சித் தலைவராக ஐந்து முறை பொறுப்பு வகித்துள்ளார். அங்குள்ள சயன் கோலிவாடா பகுதி மாநகர கவுன்சிலரான ரவிராஜா காங்கிரஸ் கட்சியில் பல்வேறு பதவிகளை அலங்கரித்துள்ளார்.



இந்தநிலையில் காங்கிரசை உதறி தள்ளி விட்டு அதிலிருந்து விலகிய ரவி ராஜா, மகாராஷ்டிர மாநிலத்தின் துணை முதல்மந்திரியும், அம்மாநில பாரதிய ஜனதா கட்சி தலைவருமான தேவேந்திர பட்னாவிஸ் முன்னிலையில் பா.ஜ.க.வில் இணைந்தார்.

44 ஆண்டுகளாகதான்செய்த பணிகள் எதையுமே காங்கிரஸ் கட்சி கண்டு கொள்ளவில்லை எனவும், தனது உழைப்பை மதிக்கவில்லை எனவும் பரபரப்பு குற்றச்சாட்டுகளைதெரிவித்துள்ளஅவர்பா.ஜ.க.வில்இணைந்ததும் மும்பை மாநகர பா.ஜ.க. துணைத்தலைவர் பதவியும் அளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இரண்டு முறை சயன் கோலிவாடா தொகுதியில் வென்ற மகாராஷ்டிராவின் தமிழ் எம்.எல்.ஏ. கேப்டன் தமிழ்செல்வன் இம்முறை ரவிராஜா வரவால் மீண்டும்மிகப்பெரியவெற்றி காண்பார் என்பதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம் என மும்பை அரசியல் வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அவரது வரவு குறித்து பேசிய துணை முதல்மந்திரி தேவேந்திர பட்னாவிஸ், ரவிராஜா மிகவும் வலிமையான தலைவர். மும்பை அரசியல்வாதிகளின் சூத்திர தாரி, அவரது வரவால் பா.ஜ.க. மிகப்பெரிய பலத்தை பெற்றுள்ளது. அவரது திறமைக்கான களமாக பா.ஜ.க. அமையும் என தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள 288 சட்டசபை தொகுதிகளுக்கும் வருகிற 20ந்தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ள நிலையில் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி ரவி ராஜா பா.ஜ.க.வில் இணைந்திருப்பது அங்கு பேசும்பொருளாக மாறியுள்ளது.

## கோவை மாவட்டத்தில் தீபாவளிக்கு 80 சதவீத பட்டாசுகள் விற்பனை

கோவை, நவ.4

கோவை மாவட்டத்தில் தீபாவளியை முன்னிட்டு கடந்த வாரம் பட்டாசு கடைகள் அமைக்கப்பட்டன. கவுண்டம்பாளையம், சாய் பாபா காலனி, கணபதி, டவுன்ஹால், பீளமேடு, ராமநாதபுரம், சிங்காநல்லூர் உள்ளிட்ட நகரின் பல்வேறு இடங்களில் 370க்கும் மேற்பட்ட கடைகள் அமைக்கப்பட்டிருந்தன.

இதுதவிர, ஊரக பகுதிகளில் 360க்கும மேற்பட்ட பட்டாசு கடைகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த பட்டாசு கடைகளில் கடந்த வாரம் முதல் விற்பனை தொடங்கினாலும், சில நிறுவனங்கள் ஊழியர்களுக்கு போனஸ் மற்றும் ஊதியம் வழங்க காலதாமதம் செய்தது. இதனால் தீபாவளிக்கு 4 நாட்களுக்கு முன்பு முதல் தான் பட்டாசு விற்பனை சூடுப்பிடித்தது. பட்டாசு விலையில் பெரிய அளவில் மாற்றங்கள் இல்லாத நிலையில் பெற்றோர் குழந்தைகளுடன் சென்று பட்டாசுகளை வாங்கி சென்றனர்.

சிவகாசியில் இருந்து நேரடியாக பட்டாசு கொள்முதல் செய்தவர்கள் அதிரடி சலுகை என அறிவித்து 80 சதவீதம் வரை தள்ளுபடி விலையில் பட்டாசுகளைவிற்பனைசெய்தனர். நடப்பாண்டில், பேன்சி ரக பட்டாசுகளையும், வாணவேடிக்கை பட்டாசுகளையும் பொதுமக்கள் அதிகளவில் விரும்பி வாங்கியுள்ளனர். குழந்தைகள் வழக்கம் போல் கம்பி மத்தாப்பு, தீப்பொறி மத்தாப்பு, பிஜிலி, சங்கு சக்கரம் போன்ற வெடிகளை வாங்கி சென்றதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

மேலும், பட்டாசு வெடிக்க நேரக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டதால் பலர் அதிகளவில் பட்டாசுகளை வாங்க ஆர்வம் காட்டவில்லை. தவிர, ஆன்லைனில் பட்டாசுகள் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. இதனை இளைஞர்கள் பலர் வாங்கியதால், கடைகளில் பெரிய அளவில் பட்டாசு விற்பனையானது நடக்கவில்லை என கூறப்படுகிறது. கோவை மாவட்டத்தை பொறுத்தவரை 80 சதவீதம் பட்டாசு விற்பனை நடந்துள்ளதாக வியாபாரிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கோவை மாவட்ட பட்டாசு விற்பனையாளர் நலச்சங்கத்தின் நிர்வாகி கூறுகையில், "மாநகரில் கடந்த ஆண்டைவிட நடப்பாண்டில் 50 கடைகளுக்கு மேல் அதிகமாக பட்டாசு விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. கடைகள் அதிகரித்து இருந்தாலும், எதிர்பார்த்த அளவிற்கு விற்பனை நடந்தது. அதாவது கடைகளில் 80 சதவீதம் பட்டாசு வரை விற்பனை நடந்துள்ளது. பெரும்பாலான கடைகளில் பட்டாசுகள் பெருமளவில் விற்பனையாகி உள்ளது" என்றார்.

## டால்மியாபுரம் அருகே மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி 5ம் வகுப்பு மாணவன் பலி

டால்மியாபுரம், நவ.4

திருச்சி மாவட்டம் கல்லக்குடி அருகே மேலரசூர் கிராமத்தில் வசித்து வருபவர் அந்தோணிசாமி மகன் ரிச்சர்ட் (வயது 20). அதே ஊரை சேர்ந்த ஜெஸ்வின்குமார் (10). மேலரசூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வந்தார். இவர்கள் இருவரும் குமுளூரில் பட்டாசு வாங்குவதற்காக புள்ளம்பாடிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றார். ரிச்சர்ட் வாகனத்தை ஓட்டி சென்றார். பின்னார் ஜெஸ்வின்குமார் அமர்ந்திருந்தார். கல்லக்குடி வழியாக சென்றபோது திருச்சிசிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில் ராஜா தியேட்டர் அருகே சென்ற போது, ராஜா தியேட்டர்வடக்கு தெருவை சேர்ந்த சேகர்மகன் கோபிநாத் (37) என்பவர் வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியது. இதில் பின்புறம் உட்கார்ந்து வந்த ஜெஸ்வின்குமார் தூக்கி வீசப்பட்டு பலத்த காயங்களுடன் ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார்.

இதனை பார்த்த அப்பகுதியினர் அவரை மீட்டு சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் லால்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு முதலுதவி செய்த பின்னர் மேல் சிகிச்சைக்காக திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் அங்கிருந்து மருத்துவர் ஆலோசனைப்படி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

ஆனால் அங்கு ஜெஸ்வின்குமார் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். இது குறித்து தகவல் அறிந்த கல்லக்குடி சப்இன்ஸ்பெக்டர் வழக்குபதிவு செய்து விசாரித்து வருகிறார்கள். இறந்த ஜெஸ்வின்குமார் 10 வயது என்பதால் மேலரசூர் கிராமமக்கள் சோகத்தில் ஆழ்ந்தனர்.

## ஸ்ரீவைகுண்டத்தில் அரசு பஸ்சில் ஒழுகிய மழைநீரில் கைக்குழந்தையுடன் நனைந்த பயணிகள்

ஸ்ரீவைகுண்டம், நவ.4

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளான ஆழ்வார்திருநகரி, பெருங்குளம், தென்திருப்பேரை போன்ற பகுதியில் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பலத்த மழை பெய்தது.

இந்த நிலையில் நேற்று மதியம் ஆத்தூரில் இருந்து பெருங்குளம், ஸ்ரீவைகுண்டம் வழியாக அரசு பஸ் நெல்லை நோக்கி வந்து கொண்டிருந்தது. பெருங்குளத்தில் பலத்த மழை பெய்ததால் அரசு பஸ் ஒழுகியது. இதனால் பயணிகள் பஸ் இருக்கையில் அமர முடியாமல் எழுந்து நின்றனர். சிலர் கைக்குழந்தைகளுடன் பஸ்சில் வடிந்த மழை நீரில் நின்று கொண்டிருந்தனர். இந்த காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதற்கிடையில் அந்த பஸ்சில் பயணம் செய்த ஆத்தூரை சேர்ந்த ஒருவர் வீடியோ பதிவை வெளியிட்டுள்ளார். அந்த பதிவில், மழையால் பஸ் முழுவதும் ஒழுகியது. நான் கைக்குழந்தையுடன் அந்த பஸ்சில் பயணம் செய்தேன். குழந்தையை வைத்துக்கெண்டு இருக்கவும் முடியவில்லை, நிற்கவும் முடியவில்லை. அந்த பஸ்சில் பின்பக்கம் படிக்கட்டும் இல்லை. மாற்றுப்பஸ் கேட்டு டிப்போ அதிகாரியிடம் கேட்டோம். ஆனால் அவர்கள் சரிவர பதில் கூறவில்லை என்றார். அதனால் நாங்கள் நெல்லை செல்ல அந்த பஸ்சில் பயணச்சீட்டு வாங்கி விட்டு ஸ்ரீவைகுண்டத்தில் இறங்கவேண்டிய நிலை வந்தது. இதனால் ஸ்ரீவைகுண்டதில் நாங்கள் பஸ்சில் இருந்து இறங்கிவிட்டோம். தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி பொதுமக்கள் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள இதுபோல் பஸ்களை மாற்றி புதிய பஸ்கள் இயக்க வேண்டும் என்றார்.

# கொள்கையை மாற்றுங்கள் அல்லது எழுதி கொடுப்பவனை மாற்றுங்கள் சீமான்

சென்னை, நவ.4

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர்கூறியதாவது:

★ மீனவர் பிரச்சனை, ஆந்திராவில் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட பிரச்சனையில் விஜயின் நிலைப்பாடு என்ன?

★ திராவிடத்தை வாழ வைக்க விஜய் எதற்கு கட்சி தொடங்க வேண்டும். ★ விஜயின் மொழிக் கொள்கை தப்பாக உள்ளது. ★ இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டது பற்றி ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

★ திராவிடத்தை வாழ வைக்க விஜய் எதற்கு கட்சி தொடங்க வேண்டும்.

★ கொள்கையை மாற்றுங்கள் அல்லது எழுதி கொடுப்பவனை மாற்றுங்கள்.

★ இந்தியை வலுக்கட்டாயமாக திணித்ததே காங்கிரஸ் தான்.

★ பாஜக மதவாதம் என்றால் காங்கிரஸ் மிதவாதமா?

★ அதிமுகவின் தலைவி ஊழலுக்காக சிறையில் இருந்ததை மறந்து விட்டீர்களா?

★ எங்கள் கொள்கைக்கு எதிராக என் பெற்றோர்கள் பேசினாலும் எதிரிகள் தான்.

★ குடும்ப உறவை விட கொள்கை உறவே பெரிது.

★ கடவுளே ஆனாலும் கொள்கையில் மாற்றம் இருந்தால் எதிர்ப்பேன் என்று கூறினார்.

# கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு மலை கோவிலுக்கு சென்ற கஸ்தூரி யானை



பழனி, நவ.4

பழனி முருகன் கோவிலில் ஆண்டுதோறும் கந்தசஷ்டி திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டுக்கான விழா இன்று தொடங்கியது. இதையொட்டி பகல் 12 மணிக்கு உச்சிக்கால பூஜையில் மூலவருக்கு அபிஷேகம், அலங்காரம் நடைபெற்றது.தொடர்ந்து விநாயகர், மூலவர், சண்முகர், வள்ளிதெய்வானை, துவார பாலகர்கள், மயில், வேல் மற்றும் நவவீரர்களுக்கு காப்புக்கட்டு நடைபெற்றது. முன்னதாக அடிவாரத்தில் இருந்து கோவில் யானை கஸ்தூரி யானைப்பாதை வழியாக மலைக்கோவிலுக்கு சென்று வழிபாட்டில் கலந்து கொண்டது.

7 நாட்கள் நடைபெறும் விழாவின் 6ம் நாளில் சூரசம்ஹாரம் நடைபெறுகிறது. இதையொட்டி அன்றைய தினம் அதிகாலை 4 மணிக்கு நடைதிறப்பு, 4.30மணிக்குவிளாபூஜை, படையல் நைவேத்தியம், 11.30 மணிக்கு தங்க சப்பரத்தில் சுவாமி எழுந்தருளல், 11.45 மணிக்கு மண்டகப்படி நடக்கிறது. பின்பு 12 மணிக்கு உச்சிக் கால பூஜை, மதியம் 1.30 மணிக்குசாயரட்சைபூஜை நடைபெறுகிறது. பின்னர் 3.10 மணிக்கு சூரர்களை வதம் செய்வதற்காக அம்மனிடம் சின்னக்குமாரர் வேல் வாங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதைத்தொடர்ந்து மலைக்கோவில் நடை சாத்தப்படுகிறது.

பின்னர் சூரசம்ஹார நிகழ்ச்சிக்காக சின்னக்குமாரர் வில், அம்பு, கேடயம், குத்தீட்டி உள்ளிட்ட ஆயுதங்கள் மற்றும் நவவீரர்களுடன் மலைக்கோவிலில் இருந்து புறப்பட்டு அடிவாரம் பாதவிநாயகர் கோவிலுக்கு வருகிறார். அதனை தொடர்ந்து திரு ஆவினன்குடி கோவிலுக்கு சென்று குழந்தை வேலாயுதசுவாமியிடம் பராசக்தி வேல் வைத்து சிறப்பு பூஜை நடைபெறுகிறது. 6 மணிக்கு மேல் கிரிவீதிகளில் சூரசம்ஹாரம் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இரவு 9 மணிக்கு மேல் மலைக்கோவில் படிப்பாதையில் உள்ள ஆரியர் மண்டபத்தில் வெற்றி விழா நிகழ்ச்சி நடக்கிறது. தொடர்ந்து பராசக்தி வேல் மலைக்கோவிலுக்கு சென்று சம்ரோட்சன பூஜை, ராக்கால பூஜை நடைபெறுகிறது.

8ந்தேதி பழனி கோவிலில் சண்முகர் வள்ளிதெய்வானை திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெறுகிறது. முன்னதாகதிருக்கல்யாண மண்டபத்தில் சண்முகர், வள்ளிதெய்வானைக்கு 16 வகை அபிஷேகம், சிறப்பு அலங்காரம் செய்துகாலை 9.30 மணிக்கு மேல் திருக்கல்யாணம் நடைபெறுகிறது. மேலும் அன்று இரவு 8.20 மணிக்கு மேல் பெரியநாயகி அம்மன் கோவிலில் முத்துக்குமாரசுவாமி, வள்ளிதெய்வானை திருக்கல்யாண நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. விழா ஏற்பாடுகளை கோவில் அலுவலர்கள் செய்து வருகின்றனர்.

பழனி முருகன் கோவில் கந்தசஷ்டி விழாவில் சூரசம்ஹாரம் நடைபெறும் 7ந்தேதி மதியம் 3.10 மணிக்கு பராசக்தி வேல் வாங்குதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. எனவே 3.10 மணிக்கு பின் நடை அடைக்கப்படுகிறது. எனவே அன்றைய தினம் காலை 11.30 மணிக்கு அனைத்து கட்டண சீட்டுகளும் நிறுத்தப்படும். இதனால் காலை 11 மணி வரை மட்டுமே பக்தர்கள் கோவிலுக்கு அனுமதிக்கப்படுவார்கள். அதே போல் அன்று இரவு தங்கர புறப்பாடும் நடைபெறாது எனதகவல்பழனிகோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எடப்பாடி பழனிசாமிக்கு விவசாயிகள் சார்பில் பாராட்டு விழா மேச்சேரியில் வருகிற 17ந்தேதி நடக்கிறது

மேட்டூர், நவ.4



மேட்டூர் காவிரி சரபங்கா உபரி நீரேற்று திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் உள்ள வறண்ட வடிநில வட்டத்தில் உள்ள 100 ஏரிகளை நிரப்பும் விதமாக 565 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உபநீர் திட்டத்தை செயல்படுத்திய முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு நீரேற்று திட்டத்தின் மூலம் பயன்பெறும் மேட்டூர், ஓமலூர், எடப்பாடி, சங்ககிரி உள்ளிட்ட பகுதியை சேர்ந்த விவசாயிகள் சார்பில் வருகிற 17ந்தேதி பாராட்டு விழா நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த விழாவை உபர் நீர் திட்டத்தில் முதல் ஏரியாக இருக்கும் எம். காளிப்பட்டி ஏரி அருகே நடத்துவது என விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர். இதனை முன்னிட்டு விழா நடைபெறும் இடத்தை சேலம் புறநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் இளங்கோவன், எம்.எல்.ஏ. மணி, எம்.பி. சந்திரசேகரன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இடம் தேர்வு செய்யப்பட்ட பிறகு விழா மேடை அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட செயலாளர் இளங்கோவன் தெரிவித்தார்.

# கிராம கமிட்டிகளை மீண்டும் உருவாக்கும் காங்கிரஸ் அடுத்த மாதத்துக்குள் கட்டமைக்க செல்வப்பெருந்தகை உத்தரவு

சென்னை, நவ.4



தமிழகத்தில் காங்கிரஸ் வலிமையை இழந்ததால் தான்கூட்டணிகள்அமைப்பதிலும், தொகுதிகளை பெறுவதிலும் சிக்கல்கள் ஏற்படுவதாக கருதுகிறார்கள். கட்சியின் கட்டமைப்புகளை பலப்படுத்தி கட்சியை வலுப்படுத்தினால்தான் மற்ற கட்சிகள் காங்கிரசை தேடி வரும் என்று தெரிவித்துள்ள மாநில தலைவர் செல்வப்பெருந்தகை அதற்கான முயற்சிகளை தொடங்கி இருக்கிறார்.

முதற்கட்டமாக கிராம கமிட்டிகளுக்கு புத்துயிரூட்டவும், இல்லாத கிராமங்களில் அமைக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

வருகிற 5ந்தேதி சேலம் மற்றும் நாமக்கல்லில் அவர் தொடங்கி வைக்கிறார். கிராம கமிட்டிகளில் தலைவர், 2 துணைத்தலைவர்கள் ஒரு பொதுச்செயலாளர், ஒரு பொருளாளர் என 5 நிர்வாகிகள் இருப்பார்கள். இந்த கட்டமைப்புகளை அடுத்த மாதம் (டிசம்பர்) 15ந்தேதிக்குள் அனைத்து கிராமங்களிலும் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கிறார்.

இந்த கமிட்டிகள் அமைத்து முடித்ததும் கிராம தரிசனம் என்ற நிகழ்ச்சியை நடத்த திட்டமிட்டுள்ளார்கள். அதன்படி ஒவ்வொரு கிராமத்துக்கும் தலைவர்கள் செல்வார்கள்.

அவர்கள் அந்த கிராமத்தில் ஒருநாள் தங்குவார்கள். அப்போது மரத்தடி நிழலில் அமர்ந்து பொதுமக்களை அழைத்து பிரச்சனைகளை கேட்டறிவார்கள்.

இந்த பணிகள் அனைத்தையும் தை மாதத்துக்குள் செய்து முடிக்கப்படும். அதன் பிறகு காங்கிரசுக்கு நிச்சயம் நல்ல வழி பிறக்கும் என்று செல்வப்பெருந்தகை நம்பிக்கை தெரிவித்து உள்ளார்.

கிராம கமிட்டிகள் என்பது முன்பு ஞானதேசிகன் தலைவராக இருந்த போது ஏற்கனவே அமைக்கப்பட்டது. ஆனால் அதை முழு அளவில் நிறைவேற்றாமல் விட்டு விட்டனர்.

இந்த முறை இந்த கமிட்டிகளை முழு அளவில் உருவாக்க திட்டமிட்டுள்ளார்கள். காங்கிரசில் வருங்காலத்தில் இந்த மாதிரி கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலம்தான் கட்சி எழுச்சி பெறும் என்றும் கூறினர்.

# திமுகவை விமர்சித்துவிட்டு அதிமுகவை விமர்சிக்காதது ஏன்? சீமான் கேள்வி





சென்னை, நவ.4

சென்னை வளசரவாக்கத்தில் உள்ள நாம் தமிழர் கட்சியின் தலைமை அலுவலகத்தில் மறைந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் சுப.தமிழ்ச்செல்வனின் நினைவு நாள் நிகழ்ச்சி கடைபிடிக்கப்பட்டது.

இதில் அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு சுப.தமிழ்ச்செல்வன் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது அவரிடம், 'விஜய்யின் அரசியல் நிலைப்பாடு பற்றி நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கடுமையாக விமர்சித்து பேசி உள்ளீர்களே என்று சரமாரியாக கேள்விகள் எழுப்பப்பட்டன. இதற்கு பதில் அளித்து சீமான் கூறியதாவது:

விஜய் கட்சியின் கொள்கை முரண்பாடுகள் கொண்டதாக உள்ளது. தமிழ் தேசியமும், திராவிடமும் எப்போதும் ஒன்றாக முடியாது. விஷமும், விஷத்தை முறிக்கும் மருந்தும் எப்படி ஒன்றாக முடியும்.

திராவிடம் என்பது மக்களை பிளவுப்படுத்தி பார்ப்பதாகும். தமிழ் தேசியம் என்பது அனைத்து இன மக்களையும் அரவணைத்து செல்வதாகும். தமிழினம் எங்கேயாவது பாதிக்கப்பட்டால் அதற்காக கண்ணீர் வடிப்பது தமிழ் தேசியமாகும். அதைப் பற்றி கவலைப்படாமல் இருப்பதே திராவிடமாகும்.

75 ஆண்டுகளுக்கு மேலாக திராவிட அரசியலால் தமிழகம் பாழ்பட்டு கிடக்கிறது. அவர்கள் வாரிசுகளோடு வரிசை கட்டி நிற்கிறார்கள். அடுத்த வாரிசும் தயாராக இருக்கிறது. இப்படி இருக்கும் போது திராவிடத்தை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்.

சமூக நீதி, பெண்ணுரிமை பற்றி பேசுவது தமிழ் தேசியம். ஆனால் அதனை பேசி அரசியல் செய்து ஏமாற்றுவது திராவிடம். எனவே திராவிட கொள்கைகளை எந்த சூழலிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. எங்கள் கொள்கைக்கு எதிராக யார் வந்தாலும் எதிரிதான். அது தம்பியாக இருந்தாலும் சரி, என்னை பெற்றெடுத்த தாய்தந்தையாக இருந்தாலும் சரி. அவர்களும் எங்களுக்கு எதிரி தான்.

சினிமாவில் வில்லனும் கதாநாயகனும் எப்படி ஒன்றாக முடியாதோ, அதே போன்று தான் தமிழ் தேசிய மும், திராவிடமும் எப்போதுமே ஒன்றாக முடியாது.

விஜய் மாநாட்டில் கூடிய கூட்டத்தை பார்த்து நாம் தமிழர் கட்சியின் வாக்குகள் பிரிந்து அவருக்கு செல்லுமா? என்று கேட்கிறீர்கள். அது தவறானது. நாம் தமிழர் கட்சிக்கு கூடுவது கொள்கை கூட்டம். நடிகை நயன்தாரா கடை திறப்புக்கு 4 லட்சம் பேர் கூடினார்கள். ஆகையால் கூட்டத்தை பற்றி பேச கூடாது. கூட்டம் என பார்த்தால் எனக்கு 36 லட்சம் மக்கள்வாக்குசெலுத்தி உள்ளனர். ரசிகர்கள்வேறு, கொள்கை போராளிகள் வேறு. விஜய் ரசிகர்கள் எனக்கு எப்படி வாக்கு செலுத்துவார்கள்?

அதேபோல் என்னுடைய வாக்கு வங்கியை ஒன்றும் செய்ய முடியாது. எனவே நாம் தமிழர் கட்சியின் வாக்குகளை விஜய்யால் பிரிக்க முடியாது. விஜய் கட்சி கொள்கைகளில் உடன்பாடு இல்லை. அதில் முரண்பாடும் உள்ளது. எனவே அவர் கட்சியின் கொள்கைகளை மாற்ற வேண்டும். இல்லையென்றால் எழுதிக் கொடுப்பவர்களை மாற்ற வேண்டும். விஜய் கொள்கையை மாற்றினால் அவரை வாழ்த்துவோம்.

ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் துரோகம் செய்த காங்கிரசை பற்றியும் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான அ.தி.மு.க. பற்றியும் விஜய் விமர்சித்து எதிர்ப்பு தெரிவிக்காததது ஏன்? இந்தியா ஏழ்மை நிலையில் இருப்பதற்கு காங்கிரஸ் கட்சிதான் காரணம். காங்கிரஸ் தமிழகத்தின் வரலாற்று பகைவன். நீட் தேர்வை கொண்டு வந்தது காங்கிரஸ் தான். ஜி. எஸ்.டி. உள்ளிட்ட பல்வேறு மக்கள் விரோத கொள்கைகளை முதலில் கொண்டு வந்ததும் காங்கிரஸ்தான்.

கச்சத்தீவை தாரை வார்த்து கொடுத்ததும் காங்கிரஸ்தான்.பா.ஜனதா செய்வது மதவாதம் என்றால் காங்கிரஸ் செய்வது மிதவாதமா? பாபர் மசூதி இடிக்கப்பட்டதும் காங்கிரஸ் ஆட்சியில்தான். காங்கிரஸ் கட்சிக்கு எதிராக பேசுவதற்கு பல விஷயங்கள் உள்ளது.

விஜய் அதுபற்றி பேசாதது ஏன்? அ.தி.மு.க. என்ன புனிதமான கட்சியா? அக்கட்சி தலைவர் ஊழல் வழக்கில் சிறை சென்று வந்தவர் தானே. அந்த கட்சியை பற்றியும் விஜய் ஏன் விமர்சிக்கவில்லை. மேடையில் ரைமிங்காக பேசினால் மட்டும் போதுமா?

தமிழக வெற்றிக் கழகம் கொடி பற்றி விளக்கம் அளித்துள்ள விஜய் மஞ்சள்மங்களரமானது என்றும், சிவப்பு புரட்சியின் அடையாளம் என்றும் பேசி இருக்கிறார். விவசாயிகளின் குறியீடான பச்சை நிறம் புரட்சி இல்லையா?

ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்று விஜய் அறிவித்துள்ளதை பார்த்து நிச்சயம் யாரும் அவருடன் செல்ல வாய்ப்பு இல்லை. குறிப்பாக அண்ணன் திருமாவளவன் எங்களுக்கெல்லாம் பாடம் நடத்திய வாத்தியார். அரசியல் முதிர்ச்சி உள்ளவர். எனவே அவர் இது போன்று சிறுபிள்ளைத்தனமான முடிவை எடுக்க மாட்டார். 8 சதவீத வாக்குகளை வைத்துக் கொண்டு சீமான் என்ன செய்ய முடியும் என்று எல்லோரும் நினைக்கலாம். பல மாநிலங்களில் எங்களை விட குறைவான சதவீத வாக்குகளை பெற்ற கட்சிகளே பின்னாளில் ஆட்சியில் அமர்ந்துள்ளன. அதற்கு உதாரணமாக பா.ஜனதாவை கூறலாம். எனவே நாங்களும் ஆட்சி அதிகாரத்தை எட்டிப் பிடிப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மயிலாடுதுறையில் துலா உற்சவத்தை முன்னிட்டு இன்று காவிரியில் நடைபெற்ற அமாவாசை தீர்த்தவாரி நிகழ்ச்சி: தருமபுரம் ஆதீன மடாதிபதி உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு

மயிலாடுதுறை, நவ.4



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் நடைபெறும் காவிரி துலா உற்சவம் மிகவும் புகழ்பெற்றதாகும். இதில் பங்கேற்க பல்வேறு ஊர்களில் இருந்தும் பக்தர்கள் வருகை புரிவர். ஐப்பசி மாதம் காவிரியில் கங்கை முதலான புண்ணிய நதிகள் நீராடி தங்கள் பாவத்தை போக்கிக்கொள்வதாக ஐதீகம். அதனை முன்னிட்டு மயிலாடுதுறையில் பாடல் பெற்ற சிவாலயங்களில் இருந்து சுவாமி அம்பாள் புறப்பட்டு காவிரியில் தீர்த்தவாரி வழங்குவது வழக்கம். இன்று ஐப்பசி அமாவாசையை முன்னிட்டு மயூரநாதர் ஆலயத்திலிருந்து வெள்ளி ரிஷப வாகனத்தில் மயூரநாதர் சுவாமி வதான்யேஸ்வரர் ஆலயத்திலிருந்து கங்கை அம்மன் சமேத மேதாதட்சிணாமூர்த்தி சுவாமி, மற்றும் விஸ்வநாதர் ஆலயம், ஐயாரப்பர் ஆலயம் இவற்றிலிருந்து இறைவன் அம்பாளுடன் காவிரிக்கரையின் இரண்டு கரைகளிலும் எழுந்தருளினர். பின்னர் அஸ்திரதேவருக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு காவிரி ஆற்றில் தீர்த்தவாரி நடைபெற்றது. இதில் தருமபுரம் ஆதீன குரு மகா சன்னிதானம் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் பங்கேற்று புனித நீராடி சுவாமி தரிசனம் செய்தனர்.

# நாமக்கல் மாவட்டம் பரமத்தில் வெட்டப்பட்ட மரங்களை அப்புறப்பட்ட சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

நாமக்கல் நவ 4



நாமக்கல் மாவட்டம் பரமத்தில் வெட்டப்பட்ட மரங்களை அப்புறப்பட்ட சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கடந்த 20.10.2024ல் திண்டுக்கல் செல்லும் வழியில் நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வட்டம், பரமத்தி வேலூருக்கு வருகை புரிந்த போது பழைய தேசிய நெடுஞ்சாலையையும், புதிய தேசிய நெடுஞ்சாலையும் இணைக்கும் பகுதியில் இருந்த மரங்களின் கிளைகள் வெட்டப்பட்டு அனைத்தும் சாலை ஓரங்களிலே போடப்பட்டது.

அன்றிலிருந்து இன்று வரை இந்த மரக்கிளைகளை இதுவரை வேலூர் சிறப்பு நிலை பேரூயஅராட்சி நிர்வாகம் எடுக்காமல் கிடப்பிலே போட்டுள்ளது. இது பொது மக்களுக்கு இடையுறு ஏற்படும் வகையிலும் பொது மக்களிடையே முகம் சுளிக்கும் அளவிலும் உள்ளது.

எனவே இதனை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அண்ணன் இதுபோன்ற சிறுபிள்ளைத்தனமான தவறுகளை எல்லாம் செய்ய மாட்டார் சீமான்





சென்னை, நவ.4

நாம்தமிழர்கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது தவெக கட்சி கொள்கைகள் குறித்து கடுமையாக விமர்சித்து பேசினார். செய்தியாளர்களின் கேள்விக்கு அவர் கூறியதாவது:

சென்னையில் வரும் 6ந்தேதி அம்பேத்கர் நூல் வெளியீட்டு விழாவில் விஜய் திருமாவளவன் பங்கேற்பது கூட்டணி நோக்கி பயணிக்கிறதா?

என் அண்ணன் என்னிலும் முதிர்ந்தனர். என்னிலும் அனுபவமும் அரசியல் அறிவும் பெற்றவர். அவருடைய மாணவர்கள் தான் நாங்கள். என் அண்ணன் இதுபோன்ற சிறுபிள்ளைத்தனமான தவறுகளை எல்லாம் செய்ய மாட்டார்.

நானே இவ்வளவு நிதானமாக இருக்கும்போது என் அண்ணன் எவ்வளவு ஆழமாக சிந்திப்பார் என்று உங்களுக்கு தெரியும்.

அண்ணன் எனக்கு பாடம் நடத்திய வாத்தியார். அவர் அதுபோன்ற தப்பு செய்ய மாட்டார். என் வாத்தியார் தப்பு செய்ய மாட்டார் என்று மாணவன் நான் உறுதியாக சொல்ல முடியும். சொல்லுவேன் என்று கூறினார்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பிரசித்தி பெற்ற கந்தசஷ்டி திருவிழா யாகசாலை பூஜை கோலாகலமாக துவங்கியது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அங்கபிரதட்சணம் விரதம் துவங்கினர்



திருச்செந்தூர், நவ.4

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பிரசித்தி பெற்ற கந்தசஷ்டி திருவிழா யாகசாலை பூஜையுடன் நேற்று கோலாகலமாக துவங்கியது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அங்கபிரதட்சணம் விரதம் துவங்கினர்.

முருகபெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாவது படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பிரசித்தி பெற்ற கந்தசஷ்டி திருவிழா யாகாலை பூஜையுடன் நேற்று கோலாகலமாக துவங்கியது. இத்திருவிழாவை முன்னிட்டு நேற்று அதிகாலை 1:00 மணிக்கு நடை திறக்கபட்டு அதிகாலை 1:30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, அதிகாலை 2:00 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடந்தது. மற்ற கால பூஜைகள் தொடர்ந்து நடந்தன. காலை 6மணிக்கு சுவாமி ஜெயந்திநாதர் வள்ளி, தெய்வானையுடன் யாகசாலையில் எழுந்தருளினார். யாகசாலையில் சிவன், பார்வதி கும்பங்களும், பிரதான மூன்று கும்பங்களான சுவாமி ஜெயந்திநாதர், வள்ளி, தெய்வானை அம்மன் மற்றும் பரிவார மூர்த்தி கும்பங்கள் என 27 கும்பங்கள் யாகசாலை மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன. காலை 7:00 மணிக்கு கோயில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ஞானசேகரன் ஆகியோரிடம், காப்பு கட்டிய வீரபாகு சிவாச்சாரியார் நிர்வாக அனுமதி தாம்பூலம் பெற்று யாகசாலை பூஜையை துவங்கினார்.

யாகசாலையில், விக்னேசுவர பூஜை, புன்னியாகவாஜனம், பூதசுத்தி, கும்பபூஜை, ஹோம பூஜை உள்பட பல்வேறு பூஜைகள் நடந்தது. காலை 9:00 மணிக்கு பூர்ணாகுதி தீபாராதனை நடந்தது. தொடர்ந்து யாகசாலையில் சுவாமி ஜெயந்திநாதருக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் நடந்தது. பின்னர் கோயில் மூலவர் மற்றும் சண்முகருக்கு உச்சிகால தீபாராதனை ஆனதும், யாகசாலையில் உள்ள சுவாமி ஜெயந்திநாதருக்கு மகாதீபாராதனை நடந்தது.

பின்னர் சுவாமி ஜெயந்திநாதர் வள்ளி தெய்வானையுடன் தங்க சப்பரத்தில் எழுந்தருளி, வேல்வகுப்பு, வீரவாள் வகுப்பு பாடல்களுடன் பஞ்சவாத்தியங்களுடன் சண்முக விலாச மண்டபத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார். அங்கு சுவாமிக்கு மகா தீபாராதனை நடந்தது.

மாலையில் சுவாமி ஜெயந்திநாதர் வள்ளி தெய்வானையுடன் திருவாடுதுறை ஆதின கந்த சஷ்டி மண்டபத்தில் எழுந்தருளினார். அங்கு சுவாமிக்கு அபிஷேகம் அலங்காரம், தீபாராதனை நடந்தது. பின்னர் சுவாமி ஜெயந்திநாதர் தங்க தேரில் எழுந்தருளி கிரி பிரகாரம் உலா வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுத்தார்.

பக்தர்கள் விரதம் துவக்கம் கந்தசஷ்டி திருவிழாவின் முதல் நாளான நேற்று அதிகாலையில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கடல் மற்றும் நாழிகிணற்றில் புனித நீராடி பச்சை நிற ஆடையணிந்து விரதம் துவங்கினர். இந்த பக்தர்கள் கோயில் கிரி பிரகாரத்தில் அங்கபிரதட்சணம் செய்து விரதம் துவங்கினர். பெரும்பாலான பெண்கள் கிரி பிரகாரத்தில் தங்கள் வேண்டுதல் நிறைவேற அடிபிரதட்சணம் செய்தனர்.

மேலும் கோயில் வளாகத்தில் ஆங்காங்கே போடப்பட்டுள்ள தற்காலிக தகர பந்தல்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தங்கியிருந்து விரதம் கடைபிடித்துவருகின்றனர். மேலும் கோயில் வளாகத்தில் ஏராளமான பக்தர்கள் குழுக்களாக அமர்ந்து முருகவ் பக்தி பஜனை பாடல்கள் பாடி விரதம் மேற்கொண்டனர்.

திருச்செந்தூர் போலீஸ் டிஎஸ்பி வசந்தராஜ் தலைமையில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

ஏற்பாடுகளை கோவில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ஞானசேகரன் மற்றும் கோயில் பணியாளர்கள் செய்துள்ளனர்.




தேனி மாவட்டம் கம்பத்தில் ஸ்ரீ அன்னபூரணி அறக்கட்டளையின் சார்பாக தீபாவளி திருநாளை முன்னிட்டு ஏழை எளிய ஆதரவற்ற முதியோர்களுக்கு வேஷ்டி சேலை வழங்கப்பட்டது.இந்நிகழ்வில் அறக்கட்டளை நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நடன கலைஞர்கள் திருநங்கைகள் மாற்றுத்திறனாளிகள் அன்னதான விழா




சேலம், நவ.4

சேலம் தமிழ்நாடு கிராமிய நாட்டுப்புற மேடை நடன கலைஞர்கள் திருநங்கைகள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அனைத்து கலைஞர்கள் நலச்சங்கம் மதியம் 2 மணி முதல் 3 வரை அன்னதானம் நிகழ்வு நடைபெறுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இது போன்ற நிகழ்வுகள் எங்களால் முடிந்தவரை இந்த ஏழை எளிய மக்களுக்கு மற்றும் ஊனமுற்றோர்களுக்கு நாங்கள் செய்து கொண்டுதான் உள்ளோம் மேலும் இயக்கங்களுக்கு ஊக்கம் அளித்து நல்ல ஒரு தொழில் அமைத்து மற்றவர்களுக்காக உழைத்து நன்மை செய்வதற்காகவே படைத்த எங்கள்சேலம் கோட்டை மாரியம்மன் க்கு மனமார நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் மேலும் மேலும் எத்தனை வருடங்கள் ஆனாலும் இதுபோன்ற ஏழை எளிய மக்களுக்கு எங்களால் முடிந்த அளவுக்கு நன்மைகள் செய்ய எங்கள் அம்மன் எங்கள் அருகிலும் மனதிலும் குடி கொள்ள வேண்டும் என அம்மனை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வணங்கி செயல்படுகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநில நிர்வாகிகள் மற்றும் சேலம் மாவட்ட நிர்வாகிகள்: மாநிலத் தலைவர் மாநில துணைத்தலைவர்மாநில பொதுச் செயலாளர் அம்மன் காளி விஜி ஜெய்பிரகாஷ்பார்த்திபன் மாநில பொருளாளர் சேலம் மாவட்ட தலைவர்சேலம் மாவட்ட செயலாளர் ரஞ் சித்பூக்கடை கருணாநிதி கிஷோர்குமார்சேலம் மாவட்ட பொருளாளர் சூர்யா நிர்வாகிகள் தொண்டர்கள் மகளிர் அணியினர் என ஏராளமானோர் இந்த விழாவில் கலந்து கொண்டனர்

# திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கந்தசஷ்டி திருவிழா: கொடியேற்றத்துடன் தொடக்கம்



நத்தம், நவ,4

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கந்தசஷ்டி திருவிழா நேற்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதையொட்டி கோவில் வளாகத்தில் யாகசாலை அமைக்கப்பட்டு கணபதி ஹோமம், கோமாதா பூஜைகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடந்தது. தொடர்ந்து கோவில் முன்பு உள்ள கொடிமரத்தில் கந்தசஷ்டி திருக்கொடி ஏற்றப்பட்டது. பின்னர் முருகப்பெருமானுக்கு பால், பழம், பன்னீர், விபூதி, புஷ்பம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும், பூஜைகளும் நடந்தது. ராஜாங்க திருக்கோலத்தில் முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தொடர்ந்து பக்தர்கள் காப்பு கட்டி விரதத்தை தொடங்கினர். விழாவில் கம்பிளியம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் விஜயாவீரச்சாமி உள்ளிட்ட சுற்றுவட்டாரங்களை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவில் இன்று முருகப்பெருமான் சிவ பூஜை திருக்காட்சியும், நாளை சிவ உபதேச திருக்காட்சியும், நவ 5ல் அருணகிரியாருக்கு நடனக்காட்சி அருளல் நிகழ்ச்சியும், நவ.6 ல் வேல்வாங்கும் திருக்காட்சியும் நடைபெறுகிறது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான கந்தசஷ்டி சூரசம்ஹாரம் நவம்பர் 7ம் தேதி மாலை நடைபெறுகிறது. மறுநாள் 8ம் தேதி காலை திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகிறது.

இத்துடன் கந்த சஷ்டி திருவிழா நிறைவடைகிறது. இதற்கான ஏற்பாடுகளை பரம்பரை அறங்காவலர் அழகுலிங்கம், இந்து சமய அறநிலையத் துறை செயல் அலுவலர் பாலசரவணன் உள்ளிட்ட குழுவினர் செய்து வருகின்றனர்.

# அப்படி ஆடைகளை அணிய சொன்ன கணவர்...விவாகரத்துக்கான அதிர்ச்சி காரணங்களை கூறிய நடிகை



பிரபல பாலிவுட் நடிகை நீலம் கோத்தாரி. ஹாங்காங்கில் பிறந்த இவர், மும்பை வந்து பின்னர் சினிமாவில் நுழைந்தார். இவர் கடந்த 2000ம் ஆண்டு லண்டனைச் சேர்ந்த ரிஷி சேத்தியா என்பவரை திருமணம் செய்துகொண்டார். பின்னர் சில காரணங்களால் இருவரும் விவாகரத்து பெற்றனர்.

அதனைத்தொடர்ந்து, கடந்த 2011ம் ஆண்டு சமீர் சோனி என்பவரை நீலம் கோத்தாரி திருமணம் செய்து கொண்டார். இவர்கள் இருவரும் சேர்ந்து அஹானா என்ற பெண் குழந்தையை தத்தெடுத்து வளர்த்து வருகின்றனர். தற்போது 54 வயதாகும் இவர் வெப் தொடர்களில் நடிப்பதில் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்நிலையில், நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட நீலம் கோத்தாரி தனது முதல் திருமணம் குறித்து பல கருத்துகளை உணர்வுப்பூர்வமாக பேசியுள்ளார்.

இதுகுறித்து அவர் பேசுகையில், 'ரிஷி சேத்தியா என்னிடம் இந்திய பாரம்பரிய உடைகளை மட்டுமே அணிய வேண்டும், அசைவ உணவுகளையும், மதுப் பழக்கத்தையும் முற்றிலுமாக தவிர்க்க வேண்டும் என்று கூறினார். அது அனைத்திற்கும் சம்மதித்தேன்.

எனக்கு அடையாளத்தை கொடுத்த பெயரையும் மாற்ற கூறினார். அதையும் மாற்றினேன். நான் சூப்பர் மார்க்கெட் அல்லது வெளியில் எங்காவது செல்லும்போது பலரும் என்னிடம் வந்து நீங்கள் நடிகை நீலமா என கேட்பார்கள். அவர்களிடம் இல்லை என பலமுறை கூறியிருக்கிறேன்.

ஒருநாள் என் மனதில் இப்படி என் அடையாளத்தை ஏன் மறைத்து வாழ வேண்டும், இதனால் யாருக்கு என்ன பயன் என தொடர்ந்து பல கேள்விகள் எழுந்தன. அதனால், நான் ரிஷி சேத்தியாவை விவாகரத்து செய்து பிரிந்து விட்டேன். இதன்பின்தான், சமீர் சோனி என்பவரை காதலித்து 2011ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டேன்' என்றார்.

# புகைப்பிடிப்பதை நிறுத்திவிட்டேன் ரசிகர்களுக்கு இன்பதிர்ச்சி கொடுத்த ஷாருக்கான்




இந்தி சினிமாவில் அன்பாக கிங் கான் என அழைக்கப்படுபவர் நடிகர் ஷாருக்கான். இந்தி திரையுலகின் சூப்பர் ஸ்டார் ஆவார். அட்லீ இயக்கத்தில் ஷாருக்கான் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான ஜவான் திரைப்படம் மாபெரும் வெற்றியைப் பெற்றது. திரைப்படம் இதுவரை 1200 கோடி ரூபாய்க்கும் மேல் வசூலித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்று ஷாருக்கான் அவரது 59வது பிறந்தநாளை தனது ரசிகர்களுடன் கொண்டாடினார். அப்பொழுது நடைப்பெற்ற மீட் அண்ட் கிரீட் என்ற பிறந்தநாள் விழாவில் ஷாருக்கான் "நான் இப்பொழுது புகைப்பிடிப்பதை நிறுத்திவிட்டேன். புகைப்பிடிப்பதை நிறுத்திய பின் சுவாசம் சீராக இருப்பதை உணரமுடிகிறது" என கூறியுள்ளார். இது ரசிகர்களுக்கு மிகவும் உற்சாகத்தை கொடுத்துள்ளது. 2011 ஆம் ஆண்டு நடந்த ஒரு நேர் காணலில் ஷாருக்கான் தான் ஒரு நாளைக்கு 100 சிகரெட் பிடிப்பேன். உணவு , தண்ணீர் என எதுவும் உட்கொள்ளாமல், 30 கப் காபி மட்டும் குடித்துக்கொண்ட காலமும் இருந்தது என கூறியது குறிப்பிடத்தக்கது.

தனது 59 வது பிறந்தநாளை முன்னிட்டு இதை கூறியது ரசிகர்களுக்கும் இன்ப அதிர்ச்சியாக அமைந்துள்ளது.

# நியூயார்க் டைம்ஸ்ல் திரிஷா, சமந்தா கொடுத்த ரியாக்ஷன்




தமிழ் சினிமாவின் முன்னணி கதாநாயகிகளுள் ஒருவராவார் திரிஷா. இவர் நடிகர் விஜய் நடித்த லியோ திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்து இருந்தார். இப்படம் மாபெரும் வரவேற்பை பெற்றது. சில மாதங்களுக்கு முன் விஜய் நடிப்பில் வெளியான கோட் திரைப்படத்தில் மட்ட என்ற பாடலில் சிறப்பு நடனம் ஆடினார்.

தற்பொழுது அஜித் நடித்துள்ள விடாமுயற்சி மற்றும் குட் பேட் அக்லி திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார். தக் லைஃப் மற்றும் தெலுங்கில் விஷ்வம்பரா மற்றும் மலையாளத்தில் ஐடன்டிட்டி போன்ற திரைப்படங்களில் நடித்து படும் பிஸியாக உள்ளார் திரிஷா.

இந்நிலையில் மிக பிரபல வெளிநாட்டு நாளிதழான நியூ யார்க் டைம்ஸ் இல் இடம் பெற்ற புதிர் வினாக்கு விடையாக திரிஷா இடம்பெற்றுள்ளார். அந்த புதிரின் க்ளூ தென்னிந்திய நடிகை என இருந்தது. இதை நடிகை திரிஷா பெருமையுடன் அவரது இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

இப்பதிவை நடிகை சமந்தா அவரது பக்கத்தில் குவீன் என்ற தலைப்புடன் பகிர்ந்துள்ளார்.

# நியூசிலாந்துக்கு எதிரான தோல்வி; டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தை இழந்த இந்தியா



நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடியது. இந்த தொடரில் பெங்களூரு மற்றும் புனேவில் நடைபெற்ற முதல் இரு ஆட்டங்களில் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றி இருந்தது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மும்பையில் கடந்த 1ம் தேதி தொடங்குகிறது.

இந்த ஆட்டத்தில் இந்திய அணி ஆறுதல் வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்த ஆட்டத்திலும் இந்தியா தோல்வி கண்டு தொடரை முழுமையாக இழந்தது. இந்நிலையில், இந்தியா நியூசிலாந்து டெஸ்ட் தொடர் நிறைவடைந்ததை அடுத்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்த தோல்விக்கு முன்னர் முதல் இடத்தில் இருந்த இந்தியா (58.33 சதவீதம்) தற்போது 2வது இடத்திற்கு சரிந்துள்ளது. 2வது இடத்தில் இருந்த ஆஸ்திரேலியா (62.50 சதவீதம்) முதல் இடத்திற்கு முன்னேறி உள்ளது. இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்ற நியூசிலாந்து (54.55 சதவீதம்) 5வது இடத்தில் இருந்து 4வது இடத்திற்கு வந்துள்ளது.

இந்தப்பட்டியலில் 3வது இடத்தில் இலங்கை (55.56 சதவீதம்) அணியும், 5வது இடத்தில் தென் ஆப்பிரிக்கா (54.17 சதவீதம்) அணியும் உள்ளன. இதைத்தொடர்ந்து 6 முதல் 9 இடங்களில் முறையே இங்கிலாந்து (40.79 சதவீதம்), பாகிஸ்தான் (33.33 சதவீதம்), வங்காளதேசம் (27.50 சதவீதம்), வெஸ்ட் இண்டீஸ் (18.52 சதவீதம்) அணிகளும் உள்ளன.

# இந்தியா டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு முன்னேற கோலி இதனை மாற்ற வேண்டும் முகமது கைப்



இந்திய கிரிக்கெட் அணி தற்போது நியூசிலாந்துக்கு எதிராக 3 போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் 2 போட்டிகளிலேயே நியூசிலாந்து வெற்றி பெற்று முதல் முறையா இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரைகைப்பற்றி வரலாறு படைத்துவிட்டது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் ஆறுதல் வெற்றி பெறும் நோக்கில் இந்தியா விளையாடி வருகிறது.

முன்னதாக இந்த தொடரில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் விராட் கோலியின் பார்ம் இந்திய அணிக்கு கவலை அளிக்கும் விதமாக அமைந்துள்ளது. ஏனெனில் 2வது போட்டியில் புல்டாஸ் பந்துவீச்சில் கிளீன் போல்டான அவர், 3வது போட்டியில் ஒரு ரன்னிற்கு ஆசைப்பட்டு ரிஸ்க் எடுத்து ரன் அவுட் ஆனார்.

இந்நிலையில் விராட் கோலி பேட்டிங்கில் தொடர்ந்து தவறுகளை செய்து கொண்டு இருக்கிறார். இந்திய அணி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு செல்ல வேண்டும் என்றால் அவர் இதை மாற்றிக் கொள்ள வேண்டும் என முன்னாள் வீரர் முகமது கைப் கூறி இருக்கிறார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில், "விராட் கோலி இந்த தொடரில் புல்டாஸ் பந்தில் போல்டானார். இப்போது தவறான முடிவை எடுத்து ரன் அவுட் ஆகி இருக்கிறார். இந்தியா உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு செல்ல வேண்டும் என்றால் விராட் கோலி இதை உடனடியாக மாற்றிக் கொள்ள வேண்டும்." என பதிவிட்டுள்ளார்.

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டி; விளையாடும் வீரர்களை அறிவித்த பாகிஸ்தான்



முகமது ரிஸ்வான் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இதில் முதலில் ஒருநாள் போட்டிகளும், அதனைத்தொடர்ந்து டி20 போட்டிகளும் நடைபெற உள்ளன.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டி மெல்போர்னில் நாளை தொடங்குகிறது. இந்நிலையில் நாளை நடைபெறும் முதல் ஒருநாள் போட்டிக்கான விளையாடும் வீரர்களை (ஆடும் லெவன்) பாகிஸ்தான் அணி அறிவித்துள்ளது.

இந்த அணிக்கு சல்மான் அலி ஆஹா துணை கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், பாபர் அசாம், ஷாகின் ஷா அப்ரிடி, நசீம் ஷா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

பாகிஸ்தான் அணி விவரம்; அப்துல்லா ஷபீக், சைம் அயூப், பாபர் அசாம், முகமது ரிஸ்வான் (கேப்டன், விக்கெட் கீப்பர்), கம்ரான் குலாம், சல்மான் அலி ஆஹா (துணை கேப்டன்), முகமது இர்பான் கான், ஷாகின் ஷா அப்ரிடி, நசீம் ஷா, ஹாரிஸ் ராப், முகமது ஹஸ்னைன்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.